Mrs. Kunchithapatham

உ
சிவமயம்



அமரர்.

திருமதி. நவமணி இராஜேஸ்பரசிங்கம்

அவர்களின்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்
# திருமதி. நவமணி இராஜேஸ்பரசிங்கம்
# அவர்கள்



மலர்வு
11 - 10 - 1925

உதிர்வு
09 - 02 - 2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.



## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய
# திருக்கோணேசர் திருப்பதிகம்

"திருச்சிற்றம்பலம்"

நிரைகழ லரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே.

கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமும் நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலை யமர்ந்தாரே.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர் வாய்க் காரிகைபாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றும் செழுங் கடற்றரளம்
செம்பொனு மிப்பியும் சுமந்து
கொழித்து வன்திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலை யமர்ந்தாரே.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரே.

பரிந்து நன்மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளும்
செம்மையார் நம்மை யாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலை யமர்ந்தாரே

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனபால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமா மலை யமர்ந்தாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரம்மன்
இருவரு மறியா வண்ண மொள்ளெரியா
உயர்ந்தவர் பெயர்ந்த நன்மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கும்
கோணமா மலை யமர்ந்தாரே

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியலா தன்புறங் கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடு முடனாகித்
துன்று மொண்பௌவ மௌவலுஞ் சூழ்ந்து
தாழ்த்தறு திரைபல மோதிக்
குன்று மொண்கானல் வாசம் வந்துலவும்
கோணமா மலை யமர்ந்தாரே

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து, புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காகத்
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

(திருமாளிகைத் தேவர்)

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்; மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்!
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம்புகுந்து
ஆண்டங் கடந்த பொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று என்றுமுள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

அண்ண லேயெனை யாண்டு கொண்டருளிய அமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அரு ணாசலம் அமர்ந்த பெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிய

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும் பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழிஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்நிறைந்து மிக்காய்! விளங்(கு) ஒளியாய்
எண்இறந்(து) எல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) ஒன்றறியேன்

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம் ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லா பிறப்பும் பிறந்(து) இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேயுன் பொன்னடிகள் கண்(டு) இன்று வீடுற்றேன்;
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாகா! வேதங்கள்
ஐயா, எனஓங்கி ஆழ்ந்(து)அகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா!
பொய்யா யினஎல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம் அள(வு) இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய்! சேயாய் நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்(து)அடியார் சிந்தையுள் தேன்ஊறி நின்ற
பிறந்த பிறப்(பு)அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்(து)உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்(து) எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப்புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்(து)உள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே
மா(சு)அற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசமாம் பற்(று) அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆராஅமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே!

அன்பருக்(கு) அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்(து) என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்பரிய பேரொளியே!
ஆற்(று)இன்ப வெள்ளமே! அத்தாமிக் காய்!நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே!என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே!
வேற்று விகார விடக்(கு) உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே!ஓ வென்(று)என்று

போற்றிப் புகழ்ந்(து)இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்(டு)இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்(டு)அழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்(று)ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்(கு) அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஔவையார் அருளிய
# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகிலாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ தெறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்

வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்டமுப் புரிநூல் திக ழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரு மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட் கொளவேண்டித்
தாயாய் யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல் ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற்புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிகு பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத் தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குமிசை நிலையும்

பேறா திறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடை பிங்கலையின் எழுத்தறிவித்தே
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவிலுணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழுகனலைக்
கலா லெழுப்புங் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தனி யக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனி தெனக்கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமு மில்லா மனோலயந்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்று இடம் என்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவா யப்பாலுக் கப்பாலாய்

கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடு மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தினரும் பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துக்

தத்துவ நிலையைத்தந் தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலடி விநாயகர் திருப்பள்ளி எழுச்சி

கழகப் புலவர்
**பெ. பொ. சிவசேகரனார்** பாடியது

போற்றியாம் நினைத்தவை முடித்திடும் பொருளே
புண்ணியா நின்புகழ் பரவுதற் கென்றே
ஏற்றஇப் பிறவியில் நின்னருள் பெறுமா(று)
இவ்விடம் வந்தனம், பருதியும் வானில்
தோற்றினன்; புவியினை மூடிய இருளுந்
தொலைவினிற் போயது; தொன்மைசேர் கோணை
ஏற்றென ஆலடி உவந்தருள் கின்ற
உயிர்க்குயி ரேபள்ளி எழுந்தரு ளாயே.

சேவல்கள் கூவின சிலம்பின புட்கள்;
சீரணி முரசுகள் முழங்கின எங்கும்;
நாவல ராகிய அந்தணர் ஓதும்
நான்மறை யிசையினின் றெழுந்தது நாதம்;
தேவர்தம் வாழ்த்தொலி பரந்தது வானில்
திசையெலாஞ் சங்கினம் முழங்கின; அன்பர்
ஆவலோ டடைந்தனர் கோணையம் பதிசேர்
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

மாலயன் தேடியுங் காணுதற் கரிய
மதியணி சடைமுடி எம்பெருமானின்
பாலக னாகிய பழமறைப் பொருளே
பாவலர் நாவலர் புகழ்முதற் பொருளே
ஞாலமீ துயாந்தநற் கோணமா மலையில்
நம்பினோர்க் கருள்செயும் ஞானமா மலையே
ஆலடி யாய்அடி யவர்தமக் கெளியாய்
ஆருயிரே பள்ளி எழுந்தரு ளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமலர் ஏந்திய கையினர் ஒர்பால்
புகழினைப் பண்ணினில் இசைப்பவர் ஓர்பால்
பாமலர் கொண்டடி பரவுநர் ஓர்பால்
பணிந்துளங் கசிந்திட உருகுநர் ஓர்பால்
ஓமெனும் மந்திரம் ஓதுநர் ஓர்பால்
உன்னருட் கொடையினுக் கிரங்கினர் காணாய்
ஆமலி கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

நீதியாய் நிமலனாய் நித்தனாய் எங்கும்
நிறைந்திட நின்றபே ரறிவுமாய் வாழ்வின்
சோதியாய்ச் சுடரொளிப் பிழம்புமாய் அழியாத
தோற்றமாய்ப் பேரருட் கருணையு மாகி
ஓதுதற் கரியதாய்க் கோணையம் பதியில்
உறைந்தருள் தெய்வமாய் உலகினுக் கெல்லாம்
ஆதியாய் நின்றசீர் விநாயக மணியே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

வேழமா முகத்தெழில் காண்பதற் காக
விரைந்தனர் அடியவர் விடிவதன் முன்னே
காழியர் பெருமகன் திருவுளம் மகிழ்ந்து
கனிந்தருள் திருமுறைப் புகழினை உடைய
ஈழமா மணித்திரு நாட்டினில் இயற்கை
எழில்நலங் கெழுமிய முதுபதி யாய
ஆழிசூழ் கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்ப்பள்ளி எழுந்தருளாயே.

காலையும் மாலையும் நண்பகற் போதும்
கருத்துடன் நின்திரு வுருவினைத் தீண்டி
பாலையும் பழத்தையும் அமுதையும் படைத்துப்
பரிவுடன் செய்திடும் பூசனை ஏற்போய்
வேலவன் தனக்கருள் புரிந்திட அன்று
வேழமாய் வள்ளிமுன் விளங்கிய துணையே
ஆலயத் தமர்ந்தருள் கோணையம் பதியோய்
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமெனும் மந்திர ஒலியினை எழுப்பி
உலகெலாம் உன்னடி பரவுதல் கேளாய்
காமமுங் குரோதமும் அகன்றிட உன்றன்
கழலடி தஞ்சமென் றடைந்தனர் நின்பால்
பூமலி கோணையம் பதியினில் வாழ்வோர்
புகழுற ஆலடி அமர்ந்தருள் வோனே
நாமகள் திருமகள் தொழுபரம் பொருளே
நாயகனே பள்ளி எழுந்தரு ளாயே.

உலகினில் முதன்மொழி ஆகிய மொழியில்
உன்புகழ் பாடிடும் அடியவர் தமக்குப்
பலமுறை அருளிய நின்னருட் பண்பை
பார்த்துன தருள்பெறக் காத்துநிற் கின்றோம்
நிலவுமிழ் பிறைமதிச் சடையணி பெருமான்
நினைத்திட உமையவள் களித்திட உதித்தோய்
அலகில்நற் கோணையம் பதியமர்ந் தோனே
ஆலடி யாய்பள்ளி எழுந்தரு ளாயே.

குறைவிலாக் கோணையம் பதியினில் அன்பர்
கூடிநின் றுன்பதம் தொழுதிட முன்னோர்
நிறைவுன் வைத்தசீ ராலடி அதனில்
நீயருள் வழங்கிடும் மாண்பினைக் கேட்டு
நறுமலர் ஏந்திநாம் வந்துநிற் கின்றோம்
நாதமே நினைத்தவை முடித்திடும் நலமே
இறைவனே ஈசனே எம்பெருமானே
இன்னுயிரே பள்ளி எழுந்தருளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அபிராமி பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

## காப்பு

தாமரர்கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே

## நூல்

### ஞானமும் நல் வித்தையும் பெற

உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே! 01.

### பிரிந்தவர் ஒன்றுசேர

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி அறிந்தனமே 02.

### குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே 03.

### உயர்பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
புனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி எந்நாளும் பொருந்துகவே 04.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர் முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என் சென்னியதே 05.

### மந்திர சித்தி பெற

சென்னியது உன் பொன் திருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியது உன்திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே 06.

### மலையென வருந்துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்
கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே 07.

### பற்றுகள் நீக்கி பக்தி பெருகிட

சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே 08.

### அனைத்தும் வசமாக

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே 09.

### மோட்ச சாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
...ன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
...பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே

11.

## தியானத்தில் நிலைபெற

கண்ணிணியதுன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுன் இரு பாதாம் புயத்தில் பகல் இரவா
நண்ணிய துன்னை நயந்தே அவையத்து நான் முன்செய்த
புண்ணியம் ஏது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே

12.

## வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

13.

## தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே

14.

## பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கென்று முன்னே பல கோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே

15.

## முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே இளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர்தம்
மதிசயமாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே
17.

### மரணபயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற்பாதமும் ஆகி வந்து
வெவ்விய காலன் வரும்போது வெளிநிற்கவே
18.

### பேரின்ப நிலையடைய

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது மேவி உறைபவளே
19.

### வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே
20.

### அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலா மயில்தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே
21.

### இனிப்பிறவா நெறி அடைய

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே
22.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாதன்பர் கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே

23.

### நோய்கள் விலக

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே

24.

### நினைத்தகாரியம் நிறைவேற

பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே

25.

### செல்வாக்கும் செல்வாக்கம் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம் நாறும் நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி ஏற்றியவாறு நகையுடைத்தே

26.

### மனநோய் அகல

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்தழுக்கையெல்லாம் நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே

27.

### இம்மை மறுமை இன்பங்கள் அடைய

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே

28.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லா சித்திகளும் அடைய

சித்தியும் சித்தி தரும் தெய்வமுமாகித் திகழும் பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே

29.

## விபத்து ஏற்படாமல் இருக்க

அன்றே தடுத்தென்னை ஆட்கொண்டாய் கொண்டதல்ல என்னை
நன்றே உனக்கினி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே யருவே என் உமையவளே

30.

## மறுமையில் இன்பம் உண்டாக

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே

31.

## துர்மரணம் வராமலிருக்க

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே

32.

## இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுது வந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தம் எல்லாம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோளமே
உழைக்கும் பொழுதே உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே

33.

## சிறந்த நன்செய் நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்க்கதிர் ஞாயிறும் திங்களுமே

34.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமணம் நிறைவேற

திங்கள் பகவின் மணநாறுஞ் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோ தரங்கக்கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே 35.

## பழைய வினைகள் வலிமை அழிய

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மின்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே 36.

## நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே 37.

## வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக்கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முதலையா
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே 38.

## கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்த விலலான் பங்கில் வாணுதலே 39.

## பூர்வ புண்ணியம் பலன்தர

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதை நெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியை காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே 40.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லடியார் நட்புப்பெற

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணியிங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணி நம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே

41.

## உலகினை வசப்படுத்த

இடங்கொண்டு விம்மி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலை கொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப்பரிபுரையே

42.

## தீமைகள் ஒழிய

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணி இன் சொல்
திருபுரசுந்தரி சிந்துர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே

43.

## பிரிவுணர்ச்சி அகல

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டு செய்தே

44.

## உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின்பாதந்தொழாத துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கை தவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டு செய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றே

45.

## நல்நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரைமிக்கோர்
பொறுக்கும் தகமை புதியதன்றே புதுநஞ்சையுண்டு
கறுக்குந் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே

46.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யோக நிலை அடைய

வாழும் படியொன்று கண்டு கொண்டேன் மனத்தை ஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே

47.

### உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே

48.

### மரணத்துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்து குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே

49.

### அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாராயணி கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கியென்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே

50.

### மோகம் நீங்க

அரணம் பொருளென்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே

51.

### பெருஞ் செல்வம் அடைய

வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே

52.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யுணர்வு நீங்க

சின்னஞ்சிறிய மருக்கினிற் சாத்திய செய்யப்பட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப்பார்க்கு இது போலும் தவம் இல்லையே

53.

### கடன்தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம் பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்த நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
சொல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே

54.

### மோன நிலை எய்த

மின் ஆயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற (து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவ தொன்றில்லையே

55.

### யாவரும் வசமாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்றன் நெஞ்சின் உள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா! இப்பொருளறிவார்
அன்ற ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே

56.

### வறுமை ஒழிய

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே

57.

### மன அமைதி பெற

அருணாம் புயத்தும் என் சித்தாம்புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள் தகைசேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே

58.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் நல்லவர்களாக வளர

தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்
பஞ்சு அஞ்சு மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே

59.

## மெய்யுணர்வு பெற

பாலினுஞ் சொல் இனியாய் பனிமாமலர்ப்பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார் சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சால நன்றோ அடியேன் முடை நாய்த்தலையே

60.

## மாயையை வெல்ல

நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து
நியே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பெறு பெற்றேன்
தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே

61.

## எத்தகைய அச்சமும் அகல

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்ந்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என்சிந்தையதே

62.

## அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன்செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
மாறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே

63.

## பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்ற மிக்க அன்பு
பூணேன்உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப்ரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே

64.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்மகப்பேறு அடைய

ககனமும் வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கு இரு மூன்று எனத்தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே

65.

## கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே

66.

## பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பாரெங்குமே

67.

## நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி ஊறொலி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவம் உடையார் படையாத தனம் இல்லையே

68.

## சகல சௌபாக்கியங்களும் அடைய

தனம் தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே

69.

## நுண்கலைகளில் சித்தி பெற

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி மதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டிதன் பேரழகே

70.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனக்குறைகள் தீர

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம் புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே

71.

## பிறவிப்பிணி தீர

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே

72.

## குழந்தைப் பேறு உண்டாக

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடிச் செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே

73.

## தொழிலில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தபனியக் காவினில் தங்குவரே

74.

## விதியை வெல்ல

தங்குவர் கற்பக தாருவின் நீழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கு இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே

75.

## தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின் கோலமெல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டு கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்சயாண பயிரவியே

76.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பகை அச்சம் நீங்க

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர் சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே

77.

### சகல செல்வங்களையும் அடைய

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பும் களப அபிராமவல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என துணை விழிக்கே

78.

### கட்டுகளில் இருந்து விடுபட

விழிக்கே அருள் உண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடைக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே

79.

### பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஒட்டியவா என்கண் ஒடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே

80.

### நன்னடத்தை உண்டாக

அணங்கே அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீ வைத்தபேரளியே

81.

### மன ஒருமைப்பாடு அடைய

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே

82.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏவலர் பலர் உண்டாக

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்காவும் உடையவரே

83.

### சங்கடங்கள் தீர

உடையாளை ஒல்குசெம்பட்டுடையாளை ஒளிர்மதிச்செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே.

84.

### துன்பங்கள் நீங்க

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்து மாலையுமே

85.

### ஆயுத பயம் நீங்க

மால் அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும் போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே

86.

### செயற்கரிய செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங் கொண்டாளும் பராபரையே

87.

### எப்போதும் அம்பிகை அருள் பெற

பரமென்று உனை யடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே

88.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கந்தர வந்து உடம்போடு உயிர்உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே

89.

## கணவன் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

வருந்தா வகையென் மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே

90.

## அரசாங்கச் செயலில் வெற்றி பெற

மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே

91.

## மன நிலை பக்குவமடைய

பதத்தே உருகிநின் பாதத்திலே மனம்பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர்போன வழியும் செல்லேன்
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே

92.

## உள்ளத்தில் ஒளியுண்டாக

நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ் முலைமானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே

93.

## மனநிலை தூய்மையாக

விரும்பித்தொழும் அடியார் விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே

94.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மன உறுதி பெற

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயுமில்லை உனக்கேபரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே 95.

### எங்கும் பெருமை பெற

கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே 96.

### புகழும் அறமும் வளர

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்
போதிப் பிரமன், புராரி, முராரி, பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன், கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97.

### வஞ்சகர் செயல்களிலிருந்து பாதுகாப்பு பெற

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறுங் கரந்த தெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல் அறியா மடப் பூங்குயிலே 98.

### அருள் உணர்வு வளர

குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே 99.

### அம்பிகையை மனதில் காண

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண் நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே 100.

### நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கருப்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே. 101.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

### சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

### சந்திரன்

எங்கள் குறைக ளெல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

### செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய்த் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
அங்காரகனெ அவதிகள் நீக்கு

### புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தாள்வாய் பண்ணொலி யானே
உதவியே யருளும் உத்தமா போற்றி

### வியாழன்

குணமிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுட னருள்வாய்
ப்பிரகஸ்பதி வியாழப்பா குருநேசா
க்ரக தோஷமின்றிக் கடாக்ஷித் தருள்வாய்

### வெள்ளி

சுக்ரமூர்த்தி சுபமிக வீவாய்
வக்ரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

### சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்கலம் பொங்க மனம்வைத் தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தாதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இராகு**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக வருன்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

**கேது**

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குக ளின்றி
கேதுத் தேவே கேண்மையாய் இக்ஷீ

# வாழ்க்கை வரலாறு

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கருமம் இல்லையே

-திருமூலர்-

**எங்கள் குடும்ப குலவிளக்காய் அல்லும் பகலும் உழைத்த அன்பின் சொருபமாகிய அமரர் திருமதி. நவமணி இராஜேஸ்பரசிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தை தும்பிக்கையான் துணை வேண்டி குறிப்பிடலாம் என்ற சிந்தனை நம்மவர்க்கு உதித்தது**

**பிறப்பு:** கல்வி கேள்விகளிலும், கலைஞானத்திலும் ஆன்மீக எழுச்சியிலும் தலைசிறந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் கரவெட்டியில் நவிண்டிலில் தோன்றிய பெரிய தம்பி பொன்னையா என்பவருக்கும் திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பாடல் திருத்தலமாம் திருக்கோணேஸ்வரத்தில் பத்தினியார் தங்கமுத்துவுக்கும் இளைய - கடைசிப் புதல்வியாக 1925ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ந் தேதி பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடன் பிறப்பு:** கழகப்புலவர் பெ. பொ. சிவசேகரனார் (தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி முன்னாள் கணித ஆசிரியர் அவர்கள் தமையனார் ஆவார். திருமதி. இராசநாயகி கந்தையா (காந்தி ஐயா) தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரியின் முன்னாள் ஆசிரியை அவர்கள் தமக்கையார் ஆவார்.

**கல்வி:** தமது வீட்டின் அண்மையிலுள்ள திருக்கோணமலை பெருந்தெரு மெதடிஸ்த பெண்கள் ஆரம்பப் பாடசாலையில் அரிவரி வகுப்புத் தொடக்கம் மூன்றாம் வகுப்புவரையும் கல்வி கற்றார். திருக்கோணமலை வேம்படி மெதடிஸ்த மிஷன் பெண்கள் துவிபாஷா பாடசாலையில் கனிஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் (J. S. C) சித்தியடைந்தார். சிரேஷ்ட தராதர வகுப்பைத் தொடர ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் சேர்ந்தும் அங்கு அவ்வகுப்பு நடத்துவதற்கு கல்வியமைச்சினால் அனுமதி கிடைக்கவில்லை. மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் ஆங்கில பாடசாலையில் சேர்ந்து இவ்வகுப்பைத் தொடர்ந்து சிரேஷ்ட தராதரப் பரீட்சை (S. S. C Eng.) சித்தியடைந்தார்.

**ஆசிரியை:** 1945ல் தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணிபுரியும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பின் காரைதீவு இராமகிருஷ்ண மிஷன் கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிந்தார். தி/பெரிய கிண்ணியா பெண்கள் பாடசாலையில் ஆங்கில ஆசிரியையாகக் கடமையாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. இறைவன் திருவருளால் அவர் மேல் படிப்புக்கு உந்தப்பட்டார். அக்காலத்தில் இலங்கையில் கொழும்பில் நிறுவப்பட்ட ஆங்கில மொழிமூலம் பயிற்சி கொடுக்கும் வாழ்க்கைத் தொழில் சார்ந்த கல்லூரியில் **(Vocational Training College)** கற்றுத் தேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியரானார். பயிற்சி முடிந்ததும் அன்னார் வகித்த ஆசிரியப்பதவிக் காலம் 01 - 04 - 1954 தொடக்கம் மட்/வந்தாறுமூலை மத்திய கல்லூரி 01 - 01 - 1967 தொடக்கம் தம்பலகமம் மத்திய மகாவித்தியாலயம் 01 - 01 - 1970 தொடக்கம் தி/கஞ்சிமடம் மகா வித்தியாலயம் 01 - 06 - 1978 தொடக்கம் தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி உப அதிபர் 1983 தொடக்கம் தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் 13 - 10 - 1986 வரை சேவை செய்து ஓய்வு பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமணம்:** மட்/வந்தாறு மூலை மத்திய கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது தாய் மாமன் பத்தினியார் சுப்பிரமணியம் (தலைமை ஆசிரியர்) அவரினதும் திருமதி. சுப்பிரமணியம் அன்னமுத்து (ஆசிரியை) அவரினதும் சிரேஷ்ட புதல்வன் திரு. சு. இராஜேஸ்பரசிங்கம் (அரசாங்க கட்டிடத் திணைக்களம் அவர்களைத் 02 - 09 - 1954இல் திருமணம் செய்து இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டார்.

**பிள்ளைகள்:** பெரும் பேறாகிய மக்கட் பேற்றில் ஆறு குழந்தைகளுக்கு அன்னையானார், மக்களின் குழந்தைப் பருவம் முதல் பிள்ளைகளைக் கண்ணும் கருத்துமாக வளர்த்ததோடமையாது அவர்கள் கல்வி வளர்ச்சியிலும் ஆக்கமும் ஊக்கமுங் கொடுத்தார். அவர்களின் உத்தியோக நிலையையும், திருமணங்களையும் கண்டு களித்து பேரப்பிள்ளைகளையும், வளர்த்தெடுக்கும் பாக்கியத்தையும் பெற்றார்.

**மூத்த மகன்:** இ. உதயகுமார் கணக்காளர் பரீட்சையில் முதலாம் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

**இரண்டாவது மகன்:** இ. துஷ்யந்தகுமார் யாழ்ப்பாண மருத்துவக் கல்லூரியில் வைத்தியர் (Doctor) பரிட்சையில் சித்தியடைந்து, யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் வைத்தியராக (Doctor) கடமையாற்றி பின் திருக்கோணமலையில் சுகாதார வைத்திய அதிகாரியாக (M. O. H.) பணிபுரிந்து தற்போது அவுஸ்திரேலியாவில் வைத்தியராக (Doctor) பணி புரிகிறார்.

**மூன்றாவது மகள்:** திருமதி றிட்திகுமாரி ஜெயபாலன் திருக்கோணமலை மக்கள் வங்கியில் கடமை புரிகிறார்.

**நான்காவது மகள்:** திருமதி முரளிகுமாரி திவாகரூபன் அவுஸ்திரேலியாவில் பொறியியலாளர்.

**ஐந்தாவது மகள்:** திருமதி அம்புஜகுமாரி நிமலநாதன் பொறியியலாளர் (R. D & D. C.) திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறாவது மகள்:** ஸ்ரீஸ்கந்த சரவணபவ சராட்சர குமாரி தர்மசீலன் - நோர்வே (Norway)

**மருமக்கள்:** திருமதி. ரமணி துஷ்யந்தகுமார் - அவுஸ்திரேலியா திரு. அ. ஜெயபாலன் (C. E. B.) திருக்கோணமலை திரு. சி. திவாகரூபன் - பொறியியலாளர் (Engineer) அவுஸ்திரேலியா, திரு. ச. நிமலநாதன் - பொறியியலாளர் (Engineer) N E M O - ஹிங்கொறாகொட, திரு. கி. தர்மசீலன் - நோர்வே (Norway)

**பேரப்பிள்ளைகள்:** துஷ்யந்தகுமார் ரமணி தம்பதிகளுக்கு லக்ஷ்மி, பவித்திரை ஆகிய இரு பெண் குழந்தைகள் (அவுஸ்திரேலியா)

ஜெயபாலன் றிட்திகுமாரி தம்பதிகளுக்கு திருக்கோணமலை பிரணஷ்வகீதன், கஜனீஷ்வகீதன், என்னும் இரு ஆண்குழந்தைகளும், தனாத்யஷாயினி என்னும் ஒரு பெண் குழந்தையும்

திவாக ரூபன் முரளிகுமாரி தம்பதிகளுக்கு வர்ஷனா, கஸ்தூரி என்னும் இரு பெண் குழந்தைகளும் (அவுஸ்திரேலியா)

நிமலநாதன் அம்புஜகுமாரி தம்பதிகளுக்கு விதுஷன், சஷோறிந் என்னும் இரு ஆண் குழந்தைகளும் லிலக்ஷ்னி என்னும் ஒரு பெண் குழந்தையும் - திருக்கோணமலை

தர்மசீலன் சடாட்சகுமாரி தம்பதிகளுக்கு ஹேஷாங்கன், ஹேமாங்கன், என்னும் இரு ஆண்குழந்தைகளும் - நோர்வே பேரப்பிள்ளைகளாவார்கள்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் சுகவாழ்வுக்காகத் தன்னை அர்ப்பணித்த அமரர் திருமதி நவமணி இராஜேஸ்பரசிங்கம் சில மாதகாலமாக நோய்வாய்ப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்புண்டேல் இறப்புண்டு, இது தெய்வ நீதி, இது யாவரும் அறிந்த உண்மை. எனினும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர் கலங்கியழுதிட 09 - 02 - 2002 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**மண்ணுலகத்தினிற் பிறவி மாசற**
**எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறக்**
**கண்ணுதலுடையதோர் களிற்றின் மாமுகப்**
**பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்**

**கணவன்**
**மக்கள் - மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்தி



ஆண்டுகள் நாற்பத்தெட்டில் அறுவர் எம்மை
அருந்தவமிருந்து பெற்றவளே
அன்னை உந்தன் அன்புக்கு இவ் அகிலமும்
அனைத்தும் ஈடாகாதம்மா
எண்ணிய கனவுகளை உந்தன் மன
எண்ணத்திலிருத்தி அவை இனிது
ஏற்றமுடன் ஈடேற இரவு பகலாய் உன்
இன்முகம் கோணாதுழைத்த எம்முயிரே!
கருணையின் கற்பகமே! காலனுனைக்
கவர்ந்து எம்மைக் கலங்க வைத்ததும் ஏனோ!
இனி தென்று காண்போம் இவ்வுலகில்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் அன்புக்குரிய குடும்பத் தலைவியாக இருந்து
எங்களை வழி நடத்திய
திருமதி. நவமணி இராஜேஸ்பரசிங்கம் அவர்களது
மரணக்கிரியைகளில் பங்குபற்றியும், தந்தி தொலைபேசி
மூலம் அனுதாபம் தெரிவித்தும், மலர்வளையம்
சமர்ப்பித்தும், அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றி
மதிய உணவில் கலந்து கொண்டும், வேண்டிய
உதவிகள் பல புரிந்தும், ஆதரவு நல்கிய உற்றார்,
உறவினர், அன்பர்கள் அனைவருக்கும், சிறப்பாக
திருக்கோணமலை மக்கள் வங்கி பிரதான கிளை
உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும்,
இலங்கை மின்சாரசபைஉத்தியோகத்தர்களுக்கும்,
ஊழியர்களுக்கும் எங்கள் உளம் கனிந்த
நன்றியை
பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திரு. சு. இராஜேஸ்பரசிங்கம்**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

இல. 38, வித்தியாலயம் வீதி,
திருக்கோணமலை.



தி/ஸ்ரீ கணேச அச்சகம் ☎ 026-22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Offset By:
**Sri Ganesha Press. Trincomalee.**
**Tel: 026 - 22617**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org